**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 131/2022**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 5 |
| Name (திரு/திருமதி) | : ரமேஷ் |
| Father's Name/ Husband's Name | : ராமசாமி |
| Village & Taluk | : செஞ்சி |
| Calling | : சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Age | : 56 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.03.2026**

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை :**

நான் தற்போது சத்தியமங்கலம் கா.நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். கூடுதல் பொறுப்பாக அவலூர்பேட்டை காவல் நிலையத்தின் உதவி ஆய்வளராக பணி செய்து வருகிறேன். கடந்த 2021ம் வரும் அவலூர்பேட்டை காவல் நிலையத்தில் பணியாற்றிய உதவி ஆய்வாளர் திரு. விஸ்வநாத் மற்றும் காவல் ஆய்வாளர் திரு. தங்க குருநாதன் ஆகியோர்கள் பணிமாறுதல் பெற்று சென்றுவிட்டதாலும், அவர்களின் கையொப்பம் தெரியும் என்பதாலும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 06.12.2021 மாலை 20.30 மணியளவில் அவலூர்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த திரு. விஸ்வநாத் என்பவரிடம் அ.சா.1 (தனம்) என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 503/2021 இதச பிரிவுகள் 279, 337 படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ.3– ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அவர் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 07.12.2021 காலை 06.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் விஜய் மற்றும் சிவா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4– ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அவர் இவ்வழக்கின் சாட்சிகள் தனம், முருகன், ரமேஷ், மாசிலாமணி, ராஜேந்திரன், காளிதாஸ், கதிர்சேரன், ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்பு இவ்வழக்கில் காயமடைந்த பாலமுருகன் என்பவர் கடந்த 07.12.2021 அன்று அதிகாலை 02.20 மணிக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இ.த.ச. என்பதை சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை மூலம் 279, 337, 304-A இ.த.ச. பிரிவுகளின் படி சட்டப்பிரிவுகளாக மாற்றம் செய்துள்ளார். **மேற்படி சட்டப் பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு இவ்வழக்கில் 07.12.2021 அன்று காலை 07.00 – 9.00 மணி வரை திருவண்ணாமலை அரசு மருத்துவ மனையில் சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் விபத்தில் இறந்த பாலமுருகன் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். **மேற்படி பிரேத விசாரணை அறிக்கை அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு இவ்வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு. தங்க குருநாதன் என்பவரிடம் ஒப்படைத்ததை அவர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கில் இறந்த நபரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்த திருவண்ணாமலை அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. கமலக்கண்ணன் என்பவரை விசாரித்து இறந்த பாலமுருகன் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கையை பெற்றார். இறந்த நபர் அவருக்கு தலையில் ஏற்பட்ட பலதரப்பட்ட காயங்களின் விளைவினால் இறந்துள்ளார் என இறப்பிற்கான காரணம் கூறி கருத்து தெரிவித்துள்ளார். **மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ-07 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு இவ்வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் விபத்து ஏற்படுத்திய TN 16 Y 3126 என்ற டிராக்டர் மற்றும் டிப்பர் எண். TN 25 H 6886 வாகனத்தின் ஓட்டுனரான எதிரி அருண் என்பவரை 08.12.2021 அன்று 15.00 மணிக்கு கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

பின்பு இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய மேற்படி டிராக்டர் மற்றும் டிப்பர் வாகனத்தையும் விபத்துக்குள்ளான TN 16 X 9905 என்ற இரு சக்கர வாகனத்தையும் செஞ்சி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. சுந்தர்ராஜன் என்பவரிடம் ஆய்வுக்கு உட்படுத்தி அவரை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றுள்ளார். அவர் வழங்கிய ஆய்வறிக்கையில் விபத்து எந்தவிதமான இயந்திர கோளாரினாலும் ஏற்படவில்லை என சான்றுகள்

வழங்கியுள்ளார். **மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் வரிசை முறையே அசாஆ 08 மற்றும் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு இவ்வழக்கில் காயமடைந்த முருகன் என்பவருக்கு லேசான சிராய்ப்பு காயம் ஏற்பட்டு திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் வெளி நோயாளியாக சிகிச்சை பெற்று வந்தால் அவருக்கு காயச்சான்று பெற இயலவில்லை. எனவே இவ்வழக்கின் சட்டப்பிரிவுகள் 279, 337, 304 A IPC யை 279, 304 A இதச என சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **மேற்படி சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(அசாஆ 08 மற்றும் 09 ஆனது அரசு வழக்கறிஞர் முலம் குவிமுச 294(1) மற்றும் 294(3) படி மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி ஆவணங்களின் உண்மை தன்மையில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை என எதிரி தரப்பில் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் குறியீடு செய்யப்பட்டது. )

பின்பு இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவுகள் 279, 304(எ ) இதச படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், இவ்வழக்கின் சாட்சிகளை எனக்கு தெரியாது என்றாலும், அவர்களை நான் இவ்வழக்கு தொடர்பாக விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான். அ.சா.1 கொடுத்த பொய் புகாரை புலன் விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும், புலன் விசாரணை அதிகாரி குறிப்பிட்டுள்ளது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும், நான் புலன் விசாரணை அதிகாரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.**

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/- B. Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.